# ஆண்டவரைச் சென்றடையும் வழி



THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

## To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

## To the Copyright Owners


Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

## About Word of God Ministries

**Word of God Ministries** was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com



# ஆண்டவர் இந்த உலகத்தையும் அனைத்து உயிரினங்களையும் படைத்தார்




"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்."
-ஆதியாகமம் 1:1

"...பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய ...சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது." -கொலோசெயர் 1:16

"வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தராலே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். வானங்கள் கர்த்தருடையவைகள், பூமியையோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார்." -சங்கீதம் 115:15, 16.

ஆண்டவர் இந்தப் பூமியை மனிதனிடம் கொடுத்தபோது அது குறைவற்றதாக இருந்தது. பிறகு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ள இந்தச் சிறு நூலைப் படியுங்கள்.



"பின்பு தேவன் : நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள்... பூமியின் மேல்... ஆளக்கடவர்கள்."
-ஆதியாகமம் 1:26

## மனிதன் ஜீவனுள்ள ஆத்துமாவானான் 3

"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்." - ஆதியாகமம் 2:7

"பின்பு, தேவனாகிய கர்த்தர் : மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார் ... அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார்." -ஆதியாகமம் 2:18, 21-22.



நாம் ஒருபோதும் சாத்தானின் குரலுக்குச்
செவிசாய்க்கக் கூடாது.

"தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். -ஆதியாகமம் 2:15-17

பிசாசு அல்லது சாத்தான் என்றழைக்கப்பட்ட சர்ப்பம் ஆண்டவரின் அதிகாரத்தைக் குறித்து கேள்வியெழுப்பியது; அது ஒரு பொய்யையும் கூறியது.

"அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை ... என்றது. அப்பொழுது ஸ்திரீயானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான். -ஆதியாகமம் 3:4-6


## 6 ஆதாமும் ஏவாளும் தொடர்ந்து அந்தத் தோட்டத்தில் இருக்க முடியவில்லை



"அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார். அவர்... ஜீவ விருட்சத்துக்குப் போம் வழியை காவல் செய்ய... கேருபீன்களையும், வீசிக் கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்."

– ஆதியாகமம் 3:23, 24

# ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தது மனித இனத்துக்கே வருத்தமான ஒரு நாளாக இருந்தது



"...ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும்... மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று. -ரோமர் 5:12

## நினைவிற்கு ...

ஒவ்வொரு மனிதனும் பாவ இயல்போடு பிறக்கிறான். பாவத்தினால் மரணம் வருகிறபடியால் ஒருநாள் இறந்துபோவான் (மறுபடியும் ரோமர் 5:12 வாசிக்கவும்).

8 பாவத்திலிருந்து நம்மைக் காப்பாற்றுவதற்கு தமது ஒரே குமாரனை அனுப்புவதே ஆண்டவரின், திட்டமாக இருந்தது.



"அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக: ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்."

-மத்தேயு 1:21

மனித இனத்தினுள் நுழைய ஆண்டவருடைய குமாரன் மனித குழந்தையாக பிறக்க வேண்டியிருந்தது.

"ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் (கிறிஸ்து இயேசுவுக்குள்) வாசமாயிருக் கிறது."

-கொலோசெயர் 2:9

"ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது ... அந்த வார்த்தை மாம்சமாகி ... நமக்குள்ளே வாசம்பண்ணினார்..."

-யோவான் 1:1, 14.

"தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது ... இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்... இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்."

-மத்தேயு 1:22, 23

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும்" -ஏசாயா 9:6

# இயேசு கிறிஸ்து - நமது குறைவற்ற பலி

"பாவம் அறியாத அவரை ..." -2 கொரிந்தியர் 5:21

"அவர் பாவஞ்செய்யவில்லை ..."
-1 பேதுரு 2:22



மனிதனால் கொடுக்கக்கூடிய எந்த பலியும் பாவத்தைப் போக்கும் வகையில் குறைவற்றதாக இருக்கவில்லை.

"அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்திசெய்யமாட்டாதே."
- எபிரேயர் 10:4.

இயேசு தேவ ஆட்டுக்குட்டி. "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி." -யோவான் 1:29.

## நம்மைக் காப்பாற்ற இயேசு தமது உயிரை அளித்தார் 

மோசமான மக்கள் இயேசுவை வெறுத்தபடியால் அவரை ஒரு மரச் சிலுவையில் அறைந்தார்கள். ஆனால் அவரது மரணம் ஆண்டவருடைய திட்டமாக இருந்தது. உங்களையும், என்னையும் நமது பாவங்களிலிருந்து மீட்பதற்காக, இயேசு தாமாகவே தமது ஜீவனை அளித்தார்.

"ஒருவனும் அதை (என் உயிரை) என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ள மாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு..." என்று இயேசு கூறினார். - யோவான் 10:18

## தேவ ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தால் நாம் மீட்கப்படுகிறோம்


"....நீங்கள்... அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே." -1 பேதுரு 1:18, 19

## வேறெந்த பலியும் பாவத்தை அகற்ற முடியாது

"இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்."

-எபிரெயர் 10:10

**12** "இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே." ரோமர் 5:9




"நாம் பாவிகளாயிருக்கையில் (ஆண்டவருக்குக் கீழ்ப்படியாமல் இருக்கையில்) கிறிஸ்து நமக்காக" மரித்தார். -ரோமர் 5:8

# ஆண்டவருடைய குமாரனை விசுவாசிப்பவர் அனைவரும் ஜீவனைப் பெறுவார்கள்



"தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." -யோவான் 3:16

"இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள் , அவருடைய இரத்தத்தினாலே, பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது." - கொலோசெயர் 1:13, 14

மீட்பு என்பது நாம் திரும்பக் கொண்டுவரப்படுவதைக் குறிக்கிறது.

## 14 "அவர் உயிர்த்தெழுந்தார்"



"தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி: நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்."

-மத்தேயு 28:5, 6

## இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் 

"மரித்தேன், ஆனாலும், இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்." -வெளிப்படுத்தல் 1:18

"...நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்."
-யோவான். 14:19

கிறிஸ்து மரணத்தை வென்று, மரணத்தின் திறவுகோல்களை உடையவராக இருக்கிறபடியால் நாம் மரணத்தைப் பற்றிப் பயப்பட வேண்டிய அவசியமில்லை.

"நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன்." - சங்கீதம் 56:3

(ஆண்டவரின் வாக்குத்தத்தங்களைப் பற்றி அறிய 46 ஆம் பக்கம் பார்க்கவும்)

## இயேசு உங்களை மீட்கிறார் ... உங்களுக்காக ஜெபிக்கிறார்

"இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே ... தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார்." -எபிரேயர் 7:24, 25

## 16 நீங்களும் நானும் நித்திய வாழ்வைப் பெற முடியும்




நீங்கள் எந்த வழியில் செல்கிறீர்கள்?

ஆண்டவரோடு நித்தியவாழ்வைப் பெற இயேசுவே வழி.

பிசாசு அல்லது சாத்தான் நித்திய மரணத்துக்கு வழியாக இருக்கிறான்.

இந்தப் பையன் நித்திய வாழ்வைப் பெறும்படி சரியான வழியைத் தெரிந்தெடுத்திருக்கிறான்.

## நீங்கள் எதைத் தெரிந்துகொள்வீர்கள்?

"... யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்..." -யோசுவா 24:15.

"... ஆகையால் நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு..." - உபாகமம் 30:19

## நித்திய வாழ்வுக்கு வழி இயேசுவே!

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை."

-அப்போஸ்தலர் 4:12.


"நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை."

-ஏசாயா 43:11

# நாம் நித்திய வாழ்வை விரும்பினால் ஏன் இயேசுவைத் தெரிந்து கொள்ள வேண்டும்?

1. கிறிஸ்துவே வந்தவர்.

"...நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்." - யோவான் 10:10



2. நம்மை நேசித்து நமக்காக மரித்தவர் இயேசுவே!

"...என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரன் ..." -கலாத்தியர் 2:20

இயேசு நம்மைப்போல ஒரு மனிதனாக, மாம்சமும், இரத்தமும் உள்ளவராக வந்தார். ஏன்?

"...மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்."

-எபிரேயர் 2:14, 15

3. நமது பாவங்களிலிருந்து நம்மை மீட்பது இயேசுவின் இரத்தம் மட்டுமே!

"...ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே."

-லேவியராகமம் 17:11

"...அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்."

-1 யோவான் 1:7

"...அவருக்குள் அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப் பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது."

-கொலோசெயர் 1:14



4. மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்தவர் இயேசுவே!

"மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்;
மரணம் இனி அவரை ஆண்டு கொள்வதில்லை." - ரோமர் 6:9.

"பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்."

-2 கொரிந்தியர் 5:15

"...நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்" என்றார் இயேசு. -யோவான் 14:19

5. நாம் நித்திய வாழ்வைப் பெற வேண்டுமானால் நம்மில் கிறிஸ்துவின் ஆவியைப் பெற்றிருக்க வேண்டும்.

"... கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்." -கொலோசெயர் 1:27


"அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்." -ரோமர் 8:11

கிறிஸ்துவின் ஆவி உங்களில் ஜீவிப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

"... கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல."
-ரோமர் 8:9

# 22 நீங்கள் எவ்வாறு நித்திய வாழ்வைக் கண்டுகொள்ள முடியும்?

24 ஆம் பக்கம் முதல் கூறப்படும் வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்



"பிள்ளையானாலும் … அதின் நடக்கையினால் விளங்கும்."
- நீதிமொழிகள் 20:11

"இயேசு என்னை நேசிக்கிறார் என்பதை நான் அறிவேன்: ஏனெனில் வேதாகமும் அவ்வாறு கூறுகிறது."

"இயேசுவோ அவைகளைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டு: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள், அவைகளைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது." - லூக்கா 18:16

"... இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல." -மத்தேயு 18:14

நீங்கள் யாராக இருந்தாலும், எங்கே வசித்தாலும், இயேசு உங்களை நேசிக்கிறார்; அவர் உங்களுக்காக மரித்தார். நீங்கள் அவரை நேசிப்பதையும் அவர் விரும்புகிறார். அவருக்குக் கீழ்ப்படிவதின்மூலம் அவர்மீது உங்களுக்குள்ள அன்பை வெளிப்படுத்த முடியும்.

"நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்." -யோவான் 14:15

# ஆண்டவரைச் சென்றடையும் வழியைக் கண்டுகொள்வது எப்படி?

1. நீங்கள் ஒரு பாவி என்பதையும், ஆண்டவருக்குக் கீழ்ப்படியாமல் இருக்கிறீர்கள் என்பதையும் ஒப்புக் கொள்ளுங்கள்.

"எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி ..."

-ரோமர் 3:23

2. இயேசுகிறிஸ்துவின் மூலம் ஆண்டவரண்டை வாருங்கள்

"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே ... கிறிஸ்து இயேசு அவரே..." 1 தீமோத்தேயு 2:5,6

"மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக ... அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார் (இயேசு)."

-எபிரேயர் 7:25

"என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்மே தள்ளுவதில்லை. என்றார் இயேசு.

-யோவான் 6:37

3. உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புங்கள். (மனந்திரும்புதல் என்பது பாவத்தை விட்டு விடுமளவு வருத்தப்படுதல்)

"உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்."
-அப்போஸ்தலர் 3:20

"...கர்த்தர் ... ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்."
-2 பேதுரு 3:9




4. உங்கள் பாவங்களை இயேசுவிடம் அறிக்கையிடுங்கள்.

**26** கீழே கொடுக்கப்பட்டுள்ள வரிகளில் 25ஆம் பக்கத்தில் ஜெபிக்கும் கரங்கள் படத்திலுள்ள 1 யோவான் 1:9 வசனத்தை எழுதுங்கள்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

5. உங்கள் பாவங்களை விட்டுவிடுங்கள்.

"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்." -நீதிமொழிகள் 28:13

"தீமையைவிட்டு விலகி, நன்மை செய்." -சங்கீதம் 37:27.



"கிருபையினாலே விசுவாசத்
தைக் கொண்டு இரட்சிக்கப்பட்
டீர்கள் ... இது தேவனுடைய
ஈவு; ஒருவரும் பெருமை
பாராட்டாதபடிக்கு இது கிரியை
களினால் உண்டானதல்ல."
-எபேசியர் 2:8,9

6. இயேசு கிறிஸ்துவை
விசுவாசியுங்கள்.

"கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்." - ரோமர் 10:9

" ... கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்."
-அப்போஸ்தலர் 16:31.

7. உங்கள் வாழ்க்கையிலும், இருதயத்திலும் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுங்கள்.



நீங்களாகவே உங்கள் இருதயத்தின் கதவைத் திறந்து இயேசுவை உள்ளே அழைக்க வேண்டும்.

"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்."

-வெளிப்படுத்தல் 3:20

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்."

-யோவான் 1:12.

நீங்கள் இதுவரை ஜெபித்துப் பழகவில்லையென்றால், உங்களுக்கு உதவி தேவைப்படுமானால், கீழ்க்கண்ட ஜெபத்தை வழிகாட்டியாகக் கொள்ளுங்கள்.



**அன்பான ஆண்டவர் இயேசுவே,**

எனது பாவங்களை எடுத்துப் போடுவதற்காக, சிலுவையில் மரித்த உமக்கு நன்றி. நான் செய்துள்ள அனைத்துத் தவறான காரியங்களுக்காகவும் வருத்தப்படுகிறேன். எனது இருதயத்தில் நீர் வந்து, அங்கே நிரந்தரமாகத் தங்கியிருக்குமாறு வேண்டுகிறேன். நீர் எனது இருதயத்தை இப்போதே சுத்திகரிப்பீர் என்று நம்புகிறேன். உம்மை எனது சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக் கொள்கிறேன்.

இயேசுவின் நாமத்தினாலே, ஆமென்.

## 30 இயேசு உங்கள் இருதயத்தில் இருப்பாரென்றால் பாதுகாப்போடு இருப்பீர்கள்


"தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன். ஜீவனை உடையவன் ..." - 1 யோவான் 5:11, 12

"என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு: அவன் ... மரணத்தைவிட்டு நீங்கி. ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்." -யோவான் 5:24

உங்கள் சரீரம் மரிக்கும்போது, நீங்கள் ஆண்டவரோடு இருக்கிறீர்கள் (2 கொரிந்தியர் 5:8). "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக இருப்பதே அந்த இரகசியம்" (கொலோசெயர் 1:27).

நீங்கள் உங்கள் பாவங்களை மன்னிக்கும்படி இயேசுவானவரிடம் வேண்டிக்கொண்டு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் மீட்பராக ஏற்றுக் கொண்டிருப்பீர்களானால், உங்கள் பெயரைக் கீழே எழுதுங்கள்.

____________________________________



வேதாகமத்திலிருந்து நாள்தோறும் ஆண்டவருடைய வசனங்களை வாசித்து சிறப்பான வசனங்களை மனப்பாடம் செய்யுங்கள். (இந்தச் சிறு நூலில் அநேக வசனங்கள் உள்ளன).

"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது: ... அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும்... நீதியைப் படிப்பிக்குதலுக்கும், பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது." -2 தீமோத்தேயு 3:16,17

# எந்த வேளையிலும் இயேசுவானவரோடு ஜெபத்தில் பேசுங்கள்



வாழ்க்கையின் நன்மைகளுக்காக இயேசுவுக்கு நன்றி கூறுங்கள். உங்களுக்கு அவர் செய்துள்ள காரியங்களுக்காகவும், உங்கள் ஆத்துமாவை மீட்டுக்கொண்டதற்காகவும் அவரைத் துதியுங்கள். உங்கள் தேவை ஒவ்வொன்றுக்காகவும் அவரிடம் ஜெபியுங்கள். இயேசுவின் நாமத்தில் ஜெபியுங்கள்.

"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறார்." - 1 யோவான் 5:14

"... நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக் கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத்தருவார்." -யோவான் 16:23.

"...ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்..."
-யாக்கோபு 5:16

"... உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்." -மத்தேயு 5:44.

# இயேசு தம்மைப் பின்பற்றும் சீடர்களுக்குக் கற்றுக் கொடுத்த ஜெபம்

இயேசு தமது சீடர்களிடம் இவ்வாறு ஜெபிக்கும்படி கூறினார்.

"பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்."

- மத்தேயு 6:9-13.

இந்த ஜெபத்தை மனப்பாடம் செய்யுங்கள். விசுவாசிகள் இந்த ஜெபத்தை உரத்த குரலில் சேர்ந்து சொல்லுவார்கள்.

## 34 ஆண்டவருடைய பத்துக் கற்பனைகள் நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்பதைப் போதிக்கின்றன

(யாத்திராகமம் அதிகாரம் 20)

முதல் நான்கு கற்பனைகளும் ஆண்டவர்மீது நாம் கொண்டுள்ள அன்பைப் பற்றியவை

1. "என்னையன்றி உனக்கு வேறெ தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்."

2. "... ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தை யாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்."

3. "உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக."

4. "ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக."

அடுத்த ஆறு கற்பனைகளும் மனிதர்மீது கொண்டுள்ள அன்பைப் பற்றியவை.

5. "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக."
6. "கொலை செய்யாதிருப்பாயாக."
7. "விபச்சாரம் செய்யாதிருப்பாயாக."
8. "களவு செய்யாதிருப்பாயாக."
9. "பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக."
10. "பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக."

## ஆண்டவருக்குக் கீழ்ப்படிவதின்மூலம் ஜெபத்துக்கான பதிலைப் பெறுகிறோம்.

"அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக் கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்கிறோம்." -1 யோவான் 3:22


# இரண்டு பிரதான கற்பனைகள்

## ஆண்டவர் மீது அன்பு

1. "இயேசு ஆவனை நோக்கி : உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை." -மத்தேயு 22:37, 38

## மனிதர் மீது அன்பு

2. "இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே." -மத்தேயு 22:39




முன்னர் கூறப்பட்ட (பக்கம் 34, 35) பத்துக் கற்பனைகளும் இந்த இரண்டு பிரதான கட்டளைகளில் அடங்கியுள்ளன.

## அன்பே அனைத்திலும் பிரதானமானது
## "அன்பின் அதிகாரம்"
### (1 கொரிந்தியர் 13:1-8, 13)


1 நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும்
பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம்
போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். 2 நான்
தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களை
யும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பெயர்க்கத்தக்
கதாகச் சகல விசுவாசமுள்ளவனாகயிருந்தாலும், அன்பு எனக்கிரா
விட்டால் நான் ஒன்றுமில்லை. 3 எனக்கு உண்டான யாவற்றையும்
நான் அன்னதானம் பண்ணினாலும், என சரீரத்தைச் சுட்டெரிக்கப்
படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப்
பிரயோஜனம் ஒன்றுமில்லை. 4 அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்
ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது,
இறுமாப்பாயிராது.

5 அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது,
சினமடையாது, தீங்கு நினையாது, 6 அநியாயத்தில் சந்தோஷப்
படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். 7 சகலத்தையும் தாங்கும்,
சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும்
சகிக்கும். 8 அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானா
லும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம்,
அறிவானாலும் ஒழிந்துபோம். 13 இப்பொழுது விசுவாசம்,
நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில்
அன்பே பெரியது.

## தேவன் அன்பாகவே இருக்கிறார்

"... தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்." –1 யோவான் 4:16.

## நீங்கள் மற்றவர்களுக்குச் சாட்சி கூறவேண்டுமென்று இயேசு விரும்புகிறார்.



(வீட்டில், பள்ளியில்,
ஆலயத்தில், எங்கும்)

"... நீ உன் இனத்தாரிடத்தில்
உன் வீட்டிற்குப் போய், கர்த்தர்
உனக்கு இரங்கி, உனக்குச்
செய்தவைகளையெல்லாம்
அவர்களுக்கு அறிவியென்று
சொன்னார் (இயேசு)."

-மாற்கு 5:19

## 40 ஒரு மெய்யான ஆண்டவருடைய பிள்ளையைக் கண்டறிவது எப்படி?

"ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்." -மத்தேயு 7:20

"ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்..." -கலாத்தியர் 5:22, 23

### ஆண்டவருடைய பிள்ளை மற்றவர்களை மன்னிக்கிறான்

"மனுஷனுடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரம பிதா உங்களுக்கும் மன்னிப்பார்."

-மத்தேயு 6:14

### ஆண்டவர் வெறுக்கும் 7 காரியங்கள்

"அவையாவன : மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங் கால், அபத்தம் பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல்..." - நீதிமொழிகள் 6:17-19.




## மாம்சத்தின் கிரியைகள் 41

...விபசாரம், வேசித்தனம்.... விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள் ... கோபங்கள், சண்டைகள்... பொறாமைகள், கொலைகள், வெறிகள்... முதலானவைகளே, இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை..."


-கலாத்தியர் 5:19-21

"...ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும்..."

-1 கொரிந்தியர் 6:9, 10

## இயேசு தமது ஆவியால் உங்களை நிரப்பி உங்களை சுத்திகரிக்க இடம் கொடுங்கள்

"உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்.." - 1 கொரிந்தியர் 6:11




(படிக்க : லூக்கா 16:19-26)

இயேசு கிறிஸ்துவை விசுவாசியுங்கள். அவர் உங்கள் பெயரை தமது ஜீவ புஸ்தகத்தில் எழுதிக் கொள்வார்.

"ஜீவபுஸ்தகத்திலே எழுதப் பட்டவனாகக் காணப்படாதவ னெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்."

-வெளிப்படுத்தல் 20:15

"தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்."

-1 யோவான் 5:11

"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்."

-ரோமர் 6:23


"குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலை நிற்கும்..."

-யோவான் 3:36

"அதற்கு இயேசு : நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்... என்றார்."

-யோவான் 14:6

## 44 மோட்சம் உண்மையான ஓரிடம்



வெளிப்படுத்தல் 21 கூறுகிறபடி யோவான் தனது தரிசனத்தில் புதிய வானத்தையும். புதிய பூமியையும் கண்டார்.

"அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை. துக்கமுமில்லை. அலறுதலுமில்லை. வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர்; இதோ. நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார் ..." -வெளிப்படுத்தல் 21:4. 5

வானத்தில் ஆண்டவரிடமிருந்து இறங்கி வந்த புதிய எருசலேமாகிய. பரிசுத்த நகரத்தையும் யோவான் கண்டார். "...நகரம் தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப் பொன்னாயிருந்தது. நகரத்து மதில்களின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன ..." -வெளிப்படுத்தல் 21 : 18. 19

## தம்மை விசுவாசிப்பவர்களுக்காக ஓரிடத்தை ஆயத்தம்பண்ண இயேசு சென்றிருக்கிறார்



"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்." -யோவான் 14:1-3

## இந்த நற்செய்தியை மற்றவர்களுக்கும் அறிவியுங்கள்

"நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்றார் இயேசு. -மாற்கு 16:15

"... ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்..." -நீதிமொழிகள் 11:30

## 46 தமது பிள்ளைகளுக்கு ஆண்டவர் அருளியுள்ள வாக்குத்தத்தங்கள்



"...நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை ..." -எபிரேயர் 13:5

"உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்." -சங்கீதம் 91:11

"... ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை." - யோவான் 10:28

"... இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் ..." -மத்தேயு 28:20


"நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே ... நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்." -வெளிப்படுத்தல் 2:10

"... நான் இருளிலே உட்கார்ந்தால், கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார்." -மீகா 7:8

"என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது, நான் உனக்கு உத்தரவு கொடுப்பேன்...". -எரேமியா 33:3

## ஒவ்வொருவரும் உயிரோடு எழுப்பப்படுவார்கள்

"... பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்: அப்பொழுது நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்." -யோவான் 5:28, 29



## கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலில் எழுவார்கள்

"பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்."

-1 தெசலோனிக்கேயர் 4:17

"அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்." -மாற்கு 13:33

# இயேசு எப்படி வருவார்?



"இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும் ..." -வெளிப்படுத்தல் 1:7

கள்ளக் கிறிஸ்துவுக்கும், கள்ள தீர்க்க தரிசிகளுக்கும் எச்சரிக்கையாக இருங்கள்.

"அப்பொழுது, இதோ கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதிருங்கள் ... அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால், புறப்படாதிருங்கள்; இதோ அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள்." -மத்தேயு 24:23, 26

## மேகங்களினூடே விரைவாக வருவார் இயேசு

"மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும் ... மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்." -மத்தேயு 24:27, 30

# மேய்ப்பரின் சங்கீதம்
## (சங்கீதம் 23)

1கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்: நான் தாழ்ச்சியடையேன். 2அவர்
என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள்
அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார். 3அவர் என்
ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின்
பாதைகளில் நடத்துகிறார்.

4நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்
குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே இருக்கிறீர்; உமது கோலும்
உமது தடியும் என்னைத் தேற்றும். 5என் சத்துருக்களுக்கு முன்பாக நீர்
எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால்
அபிஷேகம் பண்ணுகிறீர்: என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

6என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத்
தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்தி
ருப்பேன்.

மேலும் விபரங்களுக்கும், இலவச வேதாகம போதனைகளுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

WMP India Bible Literature
67 Beracah Road
Kilpauk, Chennai - 600 010

டப்ளியூ. எம். பி.
இந்தியா பைபிள் லிட்டரேச்சர்
67, பெராக்கா ரோடு,
கீழ்பாக்கம், சென்னை - 600 010.

***இலவசம்— விற்கப்படாது***

Free — Not to be sold

www.wmpress.org 8-05 2220 Tamil WTG

